CNR No. TNVL1E-00004-2022

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,
மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.
2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் சனிக்கிழமை
(2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 05ம் நாள்)

**மோட்டார் வாகன விபத்து அசல் மனு எண். 06/2022**

தாமரைசெல்வி
க/பெ. கந்தசாமி .... மனுதாரர்

/எதிர்/

1. செந்தில்
த/பெ. வேலு
2. நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், சேலம். .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 01.04.2026ம் தேதி, இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இம்மனுவில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பூபதி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. என்.ஆர். சுப்பிரமணி, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்துள்ள மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்த பின், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**உத்தரவு**

**01)** கடந்த 08.11.2021ம் தேதி, மாலை 5.10 மணியளவில், திருப்பத்தூர் புதிய பஸ்நிறுத்தத்தில், சேலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில் ஏற்பட்டுள்ள மோட்டார் வாகன சாலை விபத்தில், கொடுங்காயம் மற்றும் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ள மனுதாரருக்கு,

எதிர்மனுதாரர்களிடமிருந்து மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக மொத்தம் ரூ.15,00,000/− பின்வட்டியுடன் பெறுவதற்காக, மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) **மனுவின் சுருக்கம் :−**

கடந்த 08.11.2021ம் தேதி, மாலை 5.10 மணியளவில், திருப்பத்தூர் புதிய பேருந்து நிறுத்தத்தில், சேலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில், மனுதாரர் ஓரமாக நின்றிருந்துள்ளார். அச்சமயம் TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை, 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும், ஓட்டிக்கொண்டு சென்று, மனுதாரரின் பின்பக்கத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

விபத்து காரணமாக, மனுதாரருக்கு உடலில் பலத்த காயம் அடைந்து, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். பின், கோவை கங்கா மருத்துவமனையில், மனுதாரர் மேல்சிகிச்சை பெற்றுள்ளார். பின் மருத்துவரின் ஆலோசனைப்படி மனுதாரர் தனியார் மருத்துவமனையில் வெளிநோயாளியாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பாக, திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில், குற்ற எண்.637/2021 ல், இ.த.ச.பிரிவுகள் 279, 337ன்கீழ் TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு அரசு பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை முழு பொறுப்பாகும்.

விபத்து சமயத்தில் மனுதாரர் 61 வயது பூர்த்தி அடைந்து தனியார் வேலை செய்து, மாதம் ரூ.20,000/−ம் வருமானம் பெற்றுள்ளார். விபத்தினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகையால், மனுதாரர் மனுவில் முன்வைத்துள்ள பல்வேறு தலைப்புகளின் கீழான மொத்தம் ரூ.15,00,000/–ஐ, எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக கொடுக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) ___ 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. 2ம் எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் மனுச் சங்கதிகளை தவிர, மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த விதம் குறித்து, மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை ஆகும். விபத்து சமயத்தில் TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை, அதன் ஓட்டுநர் மிதமான வேகத்தில், சாலை விதிமுறைகளை முறையாக பின்பற்றி, பேருந்து நிறுத்தத்திலிருந்து ஓட்டியுள்ளார்.

அச்சமயம் மனுதாரர் மேற்படி பேருந்தை கவனிக்காமல் திடீரென குறுக்கே வந்து, பேருந்தின் மீது அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும், மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் காரணம் கிடையாது. மாறாக மனுதாரரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, 2ம் எதிர்மனுதாரர் சட்டப்படியாக மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை.

மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வயது, தொழில், வருமானம் மற்றும் மருத்துவ செலவினங்களை தகுந்த முறையில் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் ஆகியவை சட்டத்திற்கு புறம்பானதாகும் . ஆகையால்,

பொய்யான சங்கதிகளுடன், மனுதாரர் தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

04) இம்மனுவினைப் பொறுத்த வரையில், மனுவில் கூறியுள்ள விபத்திற்கு காரணம் யார்? என்பதும், எதிர்மனுதாரர்களிடமிருந்து மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை கிடைக்கக்கூடியதா? என்பதும், அவ்வாறு எனில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை எவ்வளவு? என்பதும் இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனைகளாகும்.

05) மனுதாரர் தரப்பில் மனுவினை தாக்கல் செய்துள்ள மனுதாரர் தாமரைசெல்வி என்பவர் ம.சா.1 ஆகவும், வெண்மதி என்பவர் ம.சா.2 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

06) மனுவினை எதிர்த்து வழக்காடியுள்ள 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து சமயத்தில் விபத்தில் தொடர்புடைய பேருந்தை ஓட்டியுள்ள ஓட்டுநர் செந்தில் என்பவர், எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யபட்டுள்ளது.

07) <u>பிரச்சனைக்குரிய தீர்வு :-</u>

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. இருதரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களால் தனிதனியாக தாக்கல் செய்யபட்டுள்ள

எழுத்து மூலமான வாதுரைகள் இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துகொள்ளபட்டுள்ளது.

மனுதாரர், கடந்த 08.11.2021ம் தேதி, மாலை 5.10 மணியளவில், திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையத்தில், சேலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில் இடதுஓரமாக நின்றிருந்துள்ளார். அச்சமயம் TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும், ஓட்டிக்கொண்டு சென்று, மனுதாரரின் பின்புறம் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

விபத்து காரணமாக, மனுதாரருக்கு உடல் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

விபத்து நடந்துள்ள சமயத்தில், மனுதாரர் மேற்படி திருப்பத்தூர் புதிய பேருந்து நிறுத்தத்தில், சேலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில் நின்றிருந்துள்ளார் என்ற சங்கதியும், விபத்து நடைபெற்றுள்ள இடத்தில் TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து தொடர்புடையது என்ற சங்கதியும், மனுவினை எதிர்த்து வழக்காடியுள்ள 2ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படவில்லை.

விபத்து தொடர்பாக, மேற்படி TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து ஓட்டுனர் மீது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில், குற்ற எண்.637/2021ல் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணத்தில் விபத்து TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், கவனமின்மை மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாக இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யபட்டுள்ள ம.சா.2 வெண்மதி என்பவர், விபத்திற்கு அரசு பேருந்து ஓட்டுநர் காரணம் என இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி விபத்து அரசு பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைப்பெறவில்லை என எதிர்வாதம் செய்துள்ள 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து சமயத்தில் மேற்படி அரசு பேருந்தை ஓட்டியுள்ள ஓட்டுநர் செந்தில் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான குற்றவழக்கின் தீர்ப்பின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது.

விபத்திற்கு அரசு பேருந்து ஓட்டுநர் காரணம் என கூறி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அது தொடர்பான குற்றவழக்கின் தீர்ப்பு நகல் ஆவணமான எ.ம.சா.ஆ 1 ஆவணத்தில், அரசு தரப்பு குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாடின்றி நிரூபணம் செய்யபடவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை சாதகமாக்கி எ.ம.சா. 1 செந்தில் என்பவர் வழக்கிலிருந்து விடுதலை செய்யபட்டுள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் மூலம் விபத்திற்கு எ.ம.சா.1 செந்தில் காரணம் கிடையாது என சட்டப்படியாக கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது.

எ.ம.சா.1 செந்தில், இம்மனுவில் 1ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்கபட்டுள்ளார். ஆனால், அவர் இம்மனுவினை எதிர்த்து வழக்காட இந்நீதிமன்றத்திற்கு வருகை தராமல் தோன்றாதரப்பினர் நிலையில்

சேர்க்கபட்டுள்ளார். இந்நிலையில், எ.ம.சா.1 செந்தில் என்பவரது வாய்மொழி சாட்சியம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதத்திற்கு உதவக்கூடியதாக அமையவில்லை.

ஆகையால், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், மனுவில் கூறப்பட்டுள்ள விபத்திற்கு TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை மட்டும் காரணமென இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

மனுதாரர் விபத்திற்கு பின் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டு நகல் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. பின்பு மனுதாரர் கோவை கங்கா மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றுள்ளார்.

மேற்படி மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டுள்ள ம.சா.ஆ.11 மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பில், மனுதாரர் மேற்படி மருத்துவமனையில், கடந்த 12.11.2021 தேதி முதல் 26.11.2021 தேதி வரை சுமார் 14 நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்பதையும், மேற்படி கால கட்டத்தில் மனுதாரருக்கு அறுவை சிகிச்சை நடைப்பெற்றுள்ளது என்ற உண்மையையும் இந்நீதிமன்றம் தெரிந்து கொள்கிறது.

மனுதாரருக்கு மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள மருத்துவ ஆவணங்களின் அசல் ம.சா.ஆ. 7 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ளது. மேற்படி மருத்துவமனையில் மனுதாரருக்கு எடுக்கபட்டுள்ள எக்ஸ்ரேக்கள் ம.சா.ஆ9 ஆகவும், ஆய்வக அறிக்கை ம.சா.ஆ.10 ஆகவும் இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ளது.

மனுதாரர் விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களுக்காக தொடர் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை நிரூபணம் செய்வதற்கும், மனுதாரருக்கு உடலில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கும் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் எந்தவொரு சாட்சி மற்றும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

மனுதாரர் விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களுக்காக, கோவை கங்கா மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டதன் வகையில், மொத்தம் ரூ.3,16,565/– தொடர்பான மருத்துவ பில்களை ம.சா.ஆ.6 ஆகவும், மருந்துகள் வாங்கியதற்கான ரூ.22,184/–ற்கான பில்களை ம.சா.ஆ.8 ஆகவும், ரூ.65,700/–க்கான வாடகை கார் ரசீதுகளை ம.சா.ஆ.12 ஆகவும், இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளார்.

மேற்படி ஆவணங்களின் உண்மைத் தன்மையை முரண்படுத்தும் வகையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

மனுதாரர் விபத்து சமயத்தில் 61 வயது பூர்த்தியடைந்து, தனியார் வேலை செய்து மாதம் ரூ.20,000/– வருமானம் பெற்றுள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. அதனை நிருபிக்கும்பொருட்டு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைபடுத்தபடவில்லை.

இருப்பினும், மனுதாரரின் வயது, உடல் தகுதி ஆகிவற்றை கணக்கில் கொண்டு, மனுதாரர் தரப்பு வழக்கின்படி, விபத்து சமயத்தில் மனுதாரர் மேற்படி வேலை செய்து இருக்கும் பட்சத்தில், மனுதாரருக்கு

மாதம் ரூ.10,000/- வருமானம் கிடைத்திருப்பதற்கு நடைமுறை சாத்தியக் கூறுகள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்கள் தொடர்பாக ம.சா.ஆ.11 மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு ஆவணத்தில் உள்ள குறிப்புகளை இந்நீதிமன்றம் கணக்கில் கொண்டு, விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால், மனுதாரர் தனது 5 மாத கால வருமானத்தை இழந்திருக்கக் கூடும் என இந்நீதிமன்றம் கணக்கில் கொள்கிறது.

மனுதாரர் இந்நீதிமன்ற உத்தரவுப்படி மருத்துவ குழு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேற்படி மருத்துவ குழுவில் அளிக்கப்பட்டுள்ள சான்றிதழில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இயலாமை 6% என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்ற மனுக்களில், மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தொகையை முடிவு செய்யும் பொருட்டு, இழப்பீடு 1% த்திற்கு ரூ.8,000/- இழப்பீடு வழங்கவேண்டுமென கூறி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் சமீபத்தில் வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன் தீர்ப்பினை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

CMA No.3003,3096/2023, Sudhakar and Sabeshkumar Vs. Geetha and Oriendal Insurance Company Limited (Order dated 23.07.2024)

மேற்படி முன்தீர்ப்பை மனுதாரருக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

எனவே, இம்மனுவில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையானது கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | தலைப்புகள் | இழப்பீட்டிற்கான கணக்கீடு |
|---|---|---|
| 1 | மனுதாரரின் வருமான இழப்பீடு | ரூ. 50,000/- |
| 2 | ஊட்டச்சத்து வகையிலான செலவுகள் | ரூ. 25,000/- |
| 3 | மனுஉளைச்சல், வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ. 50,000/- |
| 4 | மருத்துவமனை பில்கள் | ரூ. 3,38,749/- |
| 5 | போக்குவரத்து செலவினங்களுக்கான இழப்பீடு | ரூ. 30,000/- |
| 6 | மருத்துவமனையில் உடனிருந்தோருக்கான செலவு | ரூ. 20,000/- |
| 7 | இயலாமைக்கான இழப்பீடு | ரூ. 48,000/- |
| | மொத்தம் | ரூ. 5,61,749 /- |

மனுதாரருக்கு மேற்கூறியவாறு கணக்கிடப்பட்டுள்ள மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையை விபத்தில் தொடர்புடைய TN 30 N 1756 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் என்ற முறையில் 1ம் எதிர்மனுதாரரும், நிர்வாக இயக்குநர் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரரும், மனுதாரருக்கு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர் என இந்நீதிமன்றம் முடிவு கண்டு, மனுப் பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

08) *முடிவில்,* இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக ரூ. 5,61,749/-ஐ, 1, 2 எதிர்மனுதாரர்கள் ஆண்டு வட்டி 7.5% மற்றும் விகிதாச்சார செலவுத் தொகையுடன் சேர்த்து கணக்கிட்டு தனிதனியாகவும், கூட்டாகவும் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதி முதல் முழுத்தொகை முழுவதும்

வசூலாகும் தேதி வரை, ஆண்டு வட்டி 7.5% கணக்கீடு செய்து செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி, இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் ஒரு மாத காலத்திற்குள், சார்பு நீதிபதி, MACT, பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளை, நடப்பு கணக்கு எண்.35967133396-ல் RTGS என்ற தலைப்பில் வைப்பீடு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

மேற்படி இழப்பீட்டு தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் பட்சத்தில், மனுதாரர் அதனை உடனடியாக நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

தீர்வுத் தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ. 4,990 /- என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.373/- போக மீதியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.4,617/- ஐ ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இழப்பீட்டு தொகைக்குரிய வட்டி, உத்தரவு நகல் ஆகியவற்றை மனுதாரர் பெறமுடியாது என உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் வழக்கறிஞர் ஊதியம் ரூ.12,617/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.18 17:25:19 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி :**

ம.சா.1 – தாமரைசெல்வி

ம.சா.2 – வெண்மதி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| ஆவணங்களின் வரிசை எண். | தேதி | ஆவணங்களின் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 09.11.2021 | முதல் தகவல் அறிக்கையின் நகல் |
| ம.சா.ஆ.2 | -- | திருப்பத்தூர் அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு நகல். |
| ம.சா.ஆ.3 | | அரசு பேருந்தின் பதிவு சான்று நகல். |
| ம.சா.ஆ.4 | | 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.5 | | மனுதாரரின் ஆதார்அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 | | ரூ.3,16,565/-ற்கான மருத்துவமனை பில்கள் |
| ம.சா.ஆ.7 | | மருத்துவமனை ஆவணங்கள் |
| ம.சா.ஆ.8 | | ரூ.22,184/-ற்கான மருந்து பில்கள் |
| ம.சா.ஆ.9 | | எக்ஸ்ரேக்கள் |
| ம.சா.ஆ.10 | | லேப் ரிபோர்ட் |
| ம.சா.ஆ.11 | | கோவை கங்கா மருத்துவனை வெளியேற்றுகை குறிப்பு |
| ம.சா.ஆ.12 | | ரூ,65,700/-ற்கான வாடகை கார் ரசீதுகள் |
| ம.சா.ஆ.13 | | ரூ.7,896/-ற்கான பெட்ரோல் பங்கிற்கான ரசீதுகள் |
| ம.சா.ஆ.14 | | புகைப்படங்கள் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :**

எ.ம.சா.1 – செந்தில்

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| ஆவணங்களின் வரிசை எண். | தேதி | ஆவணங்களின் தன்மை |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | STC No.632/2022 வழக்கின் தீர்ப்பு சான்றிட்ட நகல். |

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.18 17:25:29 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.